மதவழிபாட்டுத் தலங்கள் இப்போ எம்முன் பெரும் அரக்கரைப்போல் போர்க்கோலம் பூண்டு நின்றன. ஒரு அராஜக யுத்தத்திற்கு துணை போவதாய் மௌனமாக நின்றன. ''ஒரு அடக்குமுறையாளனுக்கு துணை போவதைவிட அழிந்து போவது மேல்.'' பெயர் தெரியாத தத்துவஞானி என்முன் தோன்றிச் சொன்னார். இவை இரண்டையும் என்ன உயிர் கொடுத்தும் பிடிக்கவேணும். இவை அகப்பட்டாப் பிறகு ஆமியை சுகமாய் சமாளிக்கலாம். செலி இறங்கிறதை நினைச்சும் பார்க்கஏலாது. முந்தி இந்தக் காம்ப் 200 யார் நீளமும், 100 யார் அகலமும்தான். இப்ப 1500 யார் நீளமும், 1000 யார் அகலமும் கொண்டதாய் இருக்கிறது. இதைவிட வெளிக்குள்ளே மைன்சை விதைத்து வைத்திருக்கிறான்.

நால்வரும் சிரித்தபடி புகையிரத வீதிக்கரைக் காவலரணை நோக்கி நடந்தோம்.

''கவனம் உந்த ரெயில் கேற்றடியில போகேக்க அடிக்கிறவன். அந்த சாக்கு கிழிந்து போச்சு கவனம். பென்ட் பண்ணிவாங்கோ.''

சொல்லி வைத்தாற்போல படபடவென இயந்திரத்துப்பாக்கி ஒன்று கக்கத் தொடங்கியது. ''ஆ'' அதற்கு பிறகு சத்தமே இல்லை. விரைவாக ஓடினோம். ஸ்... ஸ்.. என ரவைகள் தலைகளை குறிவைத்துப் பாய்ந்தன.

''அப்பாடா!'' டேவிட் சிரிக்க, நாங்கள் இணைந்து கொண்டோம். சிரித்தபடி சலாம் காலைப் பிடித்தான்.

''என்னடாப்பா காயமே?''

''சீ! சும்மா சிராய்ச்சுக் கொண்டு போட்டுது.''

முழங்காலிற்கு கீழாக சதை கொஞ்சம் காணாமல் போய் இருந்தது.

''மச்சான் அந்த பீல்ட் கொம்பிரசை எடு.''

ஜீவன் அழகாகக் கட்டிவிட்டார். அப்போதுதான் பார்த்தேன். எனது காற்செருப்பைக் காணவில்லை. புகையிரதவீதிக் கரை ஓரமாக ஒன்று அறுந்து கிடக்க, மற்றையது விலகிக் கிடந்தது. மனதில் செருப்புக்கு இறுதி விடைகொடுத்தேன்.

"அலேட்டாகப் பாருங்கோ. பிறகு நாங்கள் நித்திரை கொள்ள விடமாட்டான்கள்." காவலரண் பொறுப்பாளன் சிரிப்புடன் கூறினான்.

"அந்தா தெரியிற மெயின் றோட்டுக்கு எதிரா எங்கட பக்கம் இருக்கிற கட்டடம் ஆஸ்பத்திரி. இங்கால கிடக்கிறது ஆஸ்பத்திரி குவாட்டஸ் என்று நினைக்கிறன். பக்கத்தில இருக்கிறது வங்கி. அங்கால பொலிஸ் நிலையம். அடுத்தது பாற்சபை. அதற்கு அங்கால இருக்கிற நாலைஞ்சு பெரிய கட்டடமும் நெல் சேமிக்கிற சபைக்கட்டடம். உதுகள் எல்லாத்திலையும் இருக்கிறான். அவ்வளவு பெரிய பொயின்றுகள் இல்லை.

ஆனால் நிறைய டம்மிப் பொயின்றுகள் வைச்சிருக்கிறான்கள். இடைக்கிடை மரங்களில ஏறி சினைப்பண்ணுவான். இப்ப எங்களுக்கு அடிச்சவன் அந்த பொயின்ற்காரன். நெல்சபைக்கு அங்காலதான் பொலிஸ்ரேசன் இருக்கு. இங்க நின்று பார்த்தால் வடிவா தெரியாது. நாளைக்கு சுற்றிக்கொண்டு வந்து கனகராஜன்குளப் பக்கத்தால் பார்ப்பம்."

"உந்த வீடுகளிலையும் ஆமியா?"

"ஓ உதெல்லாம் அவன்தான்"

"அது ஆமியோ. ஆ... ஓ... ஓ... அவர்தான் பற்றைக்குள் மசுங்கிறார். ஒன்றுக்கு இருக்கிறார்போல!"

திரும்பிய ஜீவன் "மச்சான் என்ன ரைபிள் இருக்கு? கொண்டுவா. ஒருவரை விழுத்திறன்"

ஜி. 3யை கொண்டுவர வாங்கிக்கொண்டு பக்சைற்றை சீரமைத்துக் கொண்டார். நானும் சைற்றாலே போடட்டோ, என்றேன். தலையசைத்து இலக்குப் பார்த்தார். ஒன்று, இரண்டு சலாம் சொல்ல நாம தயாரானோம். முன்னே டுமீல்! இரு வெடிச்சத்தமும் ஒன்றாய் ஒலிக்க ரைபிள்களை உள்ளெடுத்தோம். பச்சைச் சட்டைக்காரன் அலறிக்கொண்டு கீழே விழுந்தான்.

"தூக்க வருவினம், குடுப்பம்." மீண்டும் வாசலில் பரலை சாய்த்தோம். இருவர் தூக்க ஓடிவந்தனர். பின் சட்டென்று நின்று ஏதோ சொன்னபின் வேகமாய் வந்தனர். தூக்குற நேரம் இந்த பொயின்ர எல். எம். ஜி. காரன் புக்கையாக்கப் போறான். மற்றப் பொயின்றுக்க வாங்கோ என்று விரைந்தேன். நாலாவது

